IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கற்பு

**செல்வி.ரா.சோபனா**
**214901 TR 006**
முதுகலைத் தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம்
திண்டுக்கல் – 623614

**முனைவர்.நா.முருகேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., எம்.பில்., பி.எச்டி**
தமிழ்த்துறை தலைவர்
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம்
திண்டுக்கல் – 623614

**முன்னுரை**

பண்டைய இலக்கியங்களாகிய பாட்டுக்கும் தொகைக்கும் அடுத்துப் போற்றப்படும் நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகும். இவற்றில் அடங்கியுள்ள நூல்கள் தனிச்சிறப்புடையவையாகும். மனித குலத்தின் வரலாற்றுத் துறையில் திட்டவட்டமான ஒழுங்கு முறையைப் புகுத்தியவர்கள் பெண்களாவார்கள். இப்பெண்கள் கற்பு வாழ்வில் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கற்பு நிலை, மக்கட்பேறு, பெண்களின் கடமைகள், இல்லறப் பெண்களின் நிலைகள் அமைகின்றன.

**கற்பு விளக்கம்**

தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையின் முடிவுகளைப் பெறும் போது கற்பு வாழ்க்கை நடைபெறுகின்றது. தலைவன் தலைவியை மனந்து கொள்ளும் போது தொடங்கும் இல்லற வாழ்வே கற்பு எனப்படும். தலைவன் தலைவிக்கு அமைகின்ற அனைவராலும் அறியப்பட்;ட இல்வாழ்க்கை முறையே கற்பாகும்.

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கற்பு**

கற்புடைய பெண்ணாவள் தன்னுடைய நாணத்தைக் கொண்டு அழகும்; விவேகம் உடைய தன் கனவரின் கையிலுள்ள கூர்மையான வாளை போன்று ஒத்திருப்பாள். இதனை,

***"ஆண்மகள் கையில் அயில்வாள் அனைத்துஅரோ***
***நாணுடையாள் பெற்ற நலம்"***

என்ற பாடலின் அடிகள் வழி அறிய முடிகிறது.

திரிகடுகத்தில் தன்மையான விருந்தினரைப் பாதுகாத்தலால் கணவனுக்கு நட்புடையவள் ஆகின்றாள் நாள்தோறும் இல்லறத்தை வழுவாது காத்தலால் பெற்ற தாயாகியும்;இ தன் குடும்பத்துக்குரிய மக்களைப் பெறுதலால் மனையாளாம் விருந்தோம்பல் முதலாகிய இம்மூன்று செயலும்இ கற்புடைய பெண் மேற்கொண்ட கடமைகளாகின்றன். இதனை,

***“நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்***
***இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்***
***மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்***
***கற்புடையாள் பூண்ட கடன்”[2]***

என்ற பாடல் வழி அறிந்து கொள்ளலாம்.

சிறுபஞ்சமூலத்தில் கற்புடைய பெண்ணாவள் தன் கணவனுக்கு அமிர்தம் போன்றவள். அறிவு நூல்களைக் கற்று அவற்றின் வழியில் அடங்கி நிற்பவள். உலகத்தார்க்கு அமிர்தம் போல்வான் நன்மையுள்ள நாடு அமிர்தம் போன்றது. நாட்டுக்கு நன்மையைச் செய்கின்ற அரசன் அமிர்தம் போல் இன்பம் செய்வான். சேவகனும் நன்மையானவற்றைச் செய்வானாயின் அவ்வேந்தனுக்கு அமிர்தம் போல்வான் என்பவனவாகும்.

***“கற்புடைய பெண்ணமிர்து கற்றடங்கி னான்அமிர்து***
***நற்புடைய நாடமிர்து நாட்டுக்கு –நற்புடைய***
***மேகமே சேர்கொடி வேதமிர்து சேவகனும்***
***ஆகவே செய்யின் அமிர்து.”[3]***

கற்புடைய பெண் கற்றடங்கினான். நாடு, வேந்து, சேவகன் இவர்கள் முறையே கணவன் முதலியவர்களுக்கு அமிர்தம் போல நின்று உஜ்தவுவார்கள் என்பது புலப்படுகிறது.

பெண்ணின் மேன்மை பற்றி இலக்கியங்கள் பேசுகின்றன. அதனோடு எல்லாவகை உரிமைகளையும் தொகுக்க வேண்டும் என்று இரா.பிரேமா கூறுவது நோக்கத்தக்கது.

ஆண்மக்களைப் போலவே பெண்மக்களையும் கல்வி கற்கச் செய்ய வேண்டும். அதன்மூலம் அவர்கள் நல்ல பண்புகளையும் ஆற்றல்களையும் பெற்று புதுமைப் பெண்ணாக விளங்க இயலும்.”[4]

கணவன் ஒழுக்கத்திற் கலங்குவானாயின் பெண் மான் போலும், மருண்ட பார்வையையுடைய அவன் மனைவியும் தன் கடமையிற் கலங்குவாள் என்பதை

***“பெற்றான் அதிர்ப்பிற் பிணையன்னாள்”[5]***

என்பதாகும்.

இல்வாழ்க்கையில் மனைவி சரியில்லை என்றால் தன் மனையே பாழாகிவிடும் என்பதை,

***“மனைக்குப்பாழ் வாள்நுத லின்மை”[6]***

என்ற அடிகளின் வழி அறியலாம்.

நண்பர்களிடம் மகிழ்ச்சி இன்பமானது செல்வங்களை எடுத்து ஏழைகளுக்கு வழங்கினால் அதுவும் இன்பமானது. அது போல பெண்ணானவள் கணவனைப் போற்றி அவன் வழி நின்றால் அவள் இன்பந்தருபவள் ஆவாள். இதனை,

***“நகை இனிது நாட்டார் நடுவன், பொருளின்***
***தொகை இனிது தொட்டு வழங்கின்இ தகை உடைய***
***பெண் இனிது பேணி வழிபடின் பண்இனிது***
***பாடல் உணர்வாரகத்து”[7]***

என்னும் பாடலால் அறியலாம்.

இல்வாழ்க்கையில் ஒருவனுக்குக் கண்ணைப் போல மேலான உறுப்பு வேறில்லை. அதுபோல குலமகளுக்குக் கணவனைப் போல நெருங்கிய உறவினர் வேறில்லை. என்பதைஇ

***“கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்***
***துன்னிய கேளிர் பிறரில்லை”[8]***

என்ற அடிகளின் வழி அறிய முடிகிறது.

நல்ல பெண்ணானவள் காவலில்லாவிடினும் கற்பொழுக்கத்தையே மேற்கொண்டொழுகுவாள் என்பதை,

***“பட்டாங்கே பட்டெழுகும் பண்புடையாள் காப்பினும்”[9]***

என்பதாகும்.

‘இனியவை நாற்பதில்’ சுற்றமில்லாத இல்வாழ்க்கையில் துன்பமே நிறைந்திருக்கும் மேலும் பிள்ளைகள் இல்லாவிட்டாலும் துன்பமே நிறைந்திருக்கும் என்பதை,

***“பந்தமில் லாத மனையின் வனப்பின்னா***
***தந்தையில் லாத புதல்வி னழக்கின்னா”[10]***

என்று கூறுவதால் அறியலாம்.

**நாணம்**

‘பழமொழி நானூற்றில்’ இல்வாழ்க்கை எனும் பகுதியில் எதையும் ஆராய்ந்து பார்க்கும் இல்பினையுடைய பெண்ணிற்கு நாணம் இன்றியமையாததாகும்.

***“நாணின்றி ஆகாது பெண்மை”[11]***

என்பதாகும்

ஏலாதியில் இல்லற வாழ்க்கையும் சிறந்த தவவொழுக்கமும் இரண்டும் சிறந்த நல்வினைக்குரிய வாழ்க்கைகளாகவே கொண்டு அறிஞர்கள் விரும்புவார்கள். இம்மனவாழ்வில் பொருளின் மேல் பற்று இல்லாமல் வாழ்வதேயாகும். ஆகவே மனைவாழ்க்கையும் தவவாழ்க்கையும் நல் வாழ்க்கையே ஆகும் என்று கூறுகின்றது.

***“மனைவாழ்க்கை மாதவ மென்றிரண்டு மாண்ட***
***வினைவாழ்க்கை யாக விளைப - மனைவாழ்க்கை***
***பற்றுத லின்றி விடுதல்முற் சொல்லுமேல்***
***பற்றுதல் பாதத்தில் தவம்”[12]***

என்பதாகும்.

இவ்வாறாக அறநூல்களில் கூறப்பட்;ட செய்திகள் வழி இல்வாழ்க்கை பற்றியும்இ கடைபிடிக்க வேண்டியவை பற்றியும் மனைவியின் பண்புநலன்களையும் முழுமையாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**மக்கட்பேறு**

குடும்ப வாழ்வில் மக்கட்பேறு மிகவும் முக்கியமான ஒன்றாகும் மக்கட்பேறு இல்லை எனில் இல்லறம் சிறக்காது. திருக்குறளில் அறிவுடைய குழந்தைச் செல்வத்தைத் தவிரப் பிற செல்வங்களை யாரும் மதிப்பதில்லை என்பதாகும். அமிழ்தை விட மிக இனிமையானது தம் குழந்தையின் இளங்கையினால் கிண்டிய உணவாகும். தம் குழந்தையின் மழலைச் சொல்லை கேளாதவரேஇ குழலிசை யாழிசை இனியவை என்பர்.

***"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை***
***என்னோற்றான் கொல்எனும் சொல்"[13]***

என்ற குறள் மூலம் மக்கட்பேறு எவ்வளவு முக்கியமானது என்பதை உணர முடிகின்றது.

முதுமொழிக்காஞ்சியில் 'இல்லைப்பத்து'என்ற பகுதியில் மக்கட் பேறு பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. கடல்சூழ்;ந்த இவ்வுலகத்திலுள்ள மக்களெல்லார்க்கும் மக்கட்பேறை விட அடையத்தக்க பேறு வேறில்லை என்பது புலனாகிறது.

இவ்வாறு மக்கட்பெறு சிறப்பானதாக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் விளங்குகின்றது.

**குடும்பம்**

குடும்பம் என்பது தொன்று தொட்டு இருந்து வருகின்ற ஓர் அடிப்படை இயற்கை அமைப்பாகும். இக்குடும்ப அமைப்பில் நல்ல தாயாகஇ மனைவியாகஇ மகளாகஇ மருமகளாகஇ குடும்ப தலைவியாகத் தியாகத்துடன் விளங்குபவள் பெண் ஆவாள்.

இக்குடும்ப அமைப்பைச் சமூகவியலார் இரண்டாக பிரிக்கின்றனர்.

தனிக்குடும்பம் (அ) கருக்குடும்பம், கூட்டுக்குடும்பம்

என்பதாகும்.

**கடமைகள்**

பதினெண்கீழ்க்கணக்கில் பெண்களைப் பற்றியும் குடும்ப வாழ்வில் அவர்கள் ஆற்றும் கடமையினைப் பற்றியும் காணலாம்.

குடும்ப தலைவியின் கடமைகளைப் பற்றி வாழ்க்கைத் துணை நலம் என்ற பகுதியில் காணப்படுகிறது. மனைக்கு மட்டுமல்ல எல்லா நிலையிலும் வாழ்வில் துணை நிற்பவள் என்பது புலனாகிறது. ஒரு குடும்பம் தகுதிவாய்ந்த குடும்பமாக மாறுவது குடும்பத் தலைவியின் பொறுப்பான கடமையில் தான் திகழ்கிறது.

தொல்காப்பியர்,

***"காமஞ் சான்ற கடைக்கோட் காலை***
***ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி***
***அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்***
***சிறந்தது பயற்ற விறந்ததன் பயனே"[14]***

என்று கூறுகின்றார்

வள்ளுவர், குடும்பத் தலைவி சிறப்புப் பொருந்தியவளாக இல்லையென்றால் அவள் மேற்கொண்ட குடும்ப வாழ்க்கை சிறப்பும் பெற்றுத் திகழாது என்று கூறுகின்றார். இத்தகைய மணவாழ்க்கையில் மனைவிக்கும் சிறப்பாக வேண்டப்படுவது கற்பாகும். என்று கூறுகின்றது.

இல்லத் தலைவியை வீட்டிற்குள் வைத்து அடைத்து வைக்கும் இழிவுநிலையை வள்ளுவர் விரும்பவில்லை. ஒரு பெண்ணின் கற்புத் தன்மை உறுதியுடையதாக இருந்தால் அவளை எந்த ஆபத்தும் சூழாது தலைவியானவள் முதலில் தன் கணவனைக் காக்க வேண்டும் என்பதாகும்.

குடும்பம் என்ற அமைப்பில் தலைவிக்குரிய பங்கு மிகதியாகும். குடும்பத் தலைவிக்குரிய கடமைகளாக பின்வருபன சுட்டப்படுகின்றன.

- கணவனின் வருவாய்க்குத் தக்கவாறு குடும்பம் நடத்தும் தன்மையுடைவனாக இருத்தல்.
- கற்புடையவளாகித் திகழ்தல்
- தன்னைக் காத்துக் கொண்டு தன் கணவன் உள்ளிட்ட அனைவரையும் காத்தல்.
- சரியான அறநெறிப்படி வாழ்தல் என்பதாகும்.

**திருக்குறளில் இல்லறம்**

பெண்களின் நிலை பற்றிய வள்ளுவர் காலச் சிந்தனைப் போக்குகள் காணப்படுகின்றன. இல்லறத்திற்கு ஏற்ற பண்புகளை உடையவளாகத் திகழ்பவள் மனைவி ஆவாள். இவளே வாழ்க்கைத் துனை ஆகின்றாள் என்பதாகும்.

இல்லறப் பெண் பண்புகள்

- வாழ்க்கைத் துணையாக எண்ணப்படுபவள்.
- மனையறப் பண்புகள் நிறைந்தவள்.
- கற்பு எனும் தன்மை உடையவள்.
- கணவனைத் தொழுபவள்
- தன்னையும் கணவனையும் குவப்புகளையும் காப்பவள்.
- நிறையால் தம்மைக் காத்துக் கொள்பவள்.
- புத்தேளிர் உலகில் சிறப்பினைப் பெறத்தக்கவள் என்பனவாகும்.

**இல்லறத்திற்கு ஆகாத பெண்கள்**

இல்லறத்திற்கு ஆகாத பெண்களின் நிலை பற்றியும் குறிப்பிட்டு உள்ளார் வள்ளுவர். மனைவியிடம் மாட்சிமையுடைய பண்புகள் இல்லாமல் போனால் இல்வாழ்க்கையில் எந்த பயனும் இல்லை. இல்வாழ்க்கையில் எவ்வளவு சிறப்புகள் இருந்தாலும் அவற்றால் பயன் இல்லை என்கிறார். இதனை,

*"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டர்ன்*
*வளத்தக்காள வாழ்க்கைத் துணை"*[15]

தன் மனவலிமையால் கற்பினனக் காக்காத மகளிர்க்குச் சிறை முதலியவற்றாள் உண்டான காவலால் பயன் இல்லை என்று கூறுகின்றார்.

**முடிவுரை**

கற்புநிலை மகளிரின் மக்கட்பேறு, நாணம், இல்லறத்தின் பண்புகள் போன்றவற்றை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அக மண முறை வாழ்க்கை தோன்றி தனிக் குடும்ப வாழ்க்கை என்னும் வளர்ச்சி நிலை தோன்றியபோது பெண்ணுக்கு கற்பு என்பது முதன்மையானதாகக் கற்பிக்கப்பட்டது. ஒருத்திக்கு ஒருவன் என்பது போல ஒருவனுக்கு ஒருத்தி என்பதை கூறுகிறது. பெண்கள் இல்லறத்தை சிறப்பாக நடத்தினால் அவர்களின் வாழ்க்கை மேன்மை அடையும். இல்லறத்தில் கணவனும் மனைவியும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தால் எல்லா நலன்களும் தாமாகவே வரும் என்பதை திருக்குறள் நாலடியார் கூறுகிறது. பெண்ணின் மேன்மையைப் பேசும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இல்லத்திற்கு ஆகாத பெண்களையும் குறிப்பிடுகின்றது. இல்லற வாழ்க்கையில் அடிப்படை அழகுகள் போன்றவை பதினெண்கீழ்கணக்கு நூல்களில் இடம்பெற்றுள்ளன.

**குறிப்புகள்**

1. நாலடியார், பா.எண்:**386.**
2. திரிகடுகம், பா.எண்:**64.**
3. சி.மூலம், பா.எண்:**4.**
4. பெண் எழுத்தாளர்களின் அரசியல்;;;, ப.எண்:**4**
5. இனியவை நாற்பது, பா.எண்:**21.**
6. மேலது, பா.எண்:**22.**
7. மேலது, பா.எண்:**39.**
8. மேலது, பா.எண்:**57.**
9. மேலது, பா.எண்:**92.**
10. இன்னா நாற்பது, பா.எண்:**1.**
11. ஏலாதி, பா.எண்:**73.**
12. மேலது, பா.எண்:**73.**
13. கு.எண்:**70.**
14. தொல்.பொருள், நூ.எண்:**190.**
15. கு.எண்:**51.**